Om Shakthi Om Shakti Om

Devi · Tamil

பல்லவி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் பராசக்தி ஓம் சக்தி ஓம்
(Om Sakti Om Sakti Om Parasakti OM sakti Om Sakti Om)

சரணங்கள்

கணபதிராயன்

கணபதிராயன் அவனிரு காலைபிடித்திடுவோம்
குணமுயர்ந்திடவே விடுதலை கூடி மகிழ்ந்திடவே

பராசக்தி

சொல்லுக்கடங்காவே பராசக்தி சூரத்தனங்கள் எல்லாம்
வல்லமை தந்திடுவாள் பராசக்தி வாழிஎன்றே
துதிப்போம் **வெற்றிவடிவேலன்**

வெற்றிவடிவேலன் அவனுடை வீரத்தினை புகழ்வோம்
சுற்றிநில்லாதே போ பகையே துள்ளிவருகுது வேல்

தாமரைப்பூவினிலே

தாமரைப்பூவினிலே சுருதியை தனிமிருந்துரைப்பாள்
பூமனித் தாளினையே கண்ணிலொற்றி புண்ணியம்
எய்திடுவோம்

பாம்புத் தலைமேலே

பாம்புத் தலைமேலே நடஞ்செயும் பாதத்தினை
புகழ்வோம்
மாம்பழ வாயினிலே குழலிசை வண்மை
புகழ்ந்திடுவோம்

செல்வத் திருமகள்

செல்வத் திருமகளைத் திடங்கொண்டு சிந்தனை செய்திடுவோம்
செல்வம் எல்லாந்தருவாள் நமதொளி திக்கனைத்தும் பரவும்